# மூவர் தமிழும் சைவ நெறியும்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# ஸ்ரீமூவர் தமிழும் சைவ நெறியும்

பதிப்பாசிரியர்கள்

க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

2014

நூலின் பெயர் :
மூவர் தமிழும் சைவ நெறியும்
பதிப்பாசிரியர்கள் :
க. இரகுபரன்
கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்
முதற் பதிப்பு : 2014
வெளியீடு :
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248, 1/1, காலி வீதி, கொழும்பு – 04,
இலங்கை.
அச்சு :
யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
48 B, புளுமெண்டால் வீதி, கொழும்பு – 13
தொ. பே. : 2330195
பக்கங்கள் : xxiv + 644
பிரதிகள் : 750
அளவு : 1/8
கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்
விலை : ரூபா 800 /=

Title:
'Moovar Thamilum Saiva Neriyum'
Editors:
K. Raguparan
Dr. S. Pirasanthan
First Edition : 2014
Published by:
Dept. of Hindu Religious & Cultural Affairs
248, 1/1, Galle Road, Colombo - 04,
Sri Lanka.
Printers :
Unie Arts (Pvt) Ltd.,
48 B, Bloemendhal Road, Colombo 13.
Tel: 2330195
No of Pages : xxiv + 644
No of Copies : 750
Size : 1/ 8
Paper Used : 80 GSM White Paper
Price : Rs. 800 /=

ISBN 978-955-9233-33-6

# தேவாரப் பாடல்களில் வடமொழிச் சிந்தனைகள்

சர்வேஸ்வர ஐயர் பத்மநாபன்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவசமயம். இச் சைவசமயம் வைதிக சைவம் என்றும், சித்தாந்த சைவம் என்றும் போற்றப்படும் சிறப்புடையது. சைவசமயத்தின் முதன் நூல்களுள் திருமுறைப் பாசுரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. பன்னிரெண்டு. இப்பன்னிருதிருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் எனப் போற்றப்படுகின்றன.

இம்முதல் ஏழுதிருமுறைப் பாசுரங்களையும் இயற்றியவர்கள் இறையனுபூதிமிக்கவர்கள். இவர்கள் சைவநாயன்மார்கள் எனப் போற்றப்படுபவர்கள். அவர்கள் வரிசையில் முதல் வைத்து எண்ணப்படும் மூவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் ஆவர். இவர்களே மூவர் எனச் சுட்டப்படுகின்றனர். இம்மூவரது தேவாரப் பாசுரங்களே அடங்கன் முறை எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

## தேவாரம் எனும் பெயர்ச்சிறப்பு

தேவாரம் எனும் பெயர் வழக்கு இரட்டைப்புலவராலும், சைவ எல்லப்ப நாவலராலுமே முதன்முதற் கொள்ளப்பட்டதாக வெள்ளைவாரணன் குறிப்பிடுகின்றார். எனினும் அறிஞர் பலர் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர். அதன்படி தேவர் ஆரம் என்றும், தே+வாரம் என்றும் பிரித்து பொருள் கொள்ளப்படும். வழிபாடு எனும் பொருளில் பயன்படுத்தப்பட்ட தேவாரம் எனும் பெயர்வழக்கு பின்னர் தெய்வத்தைக் குறித்து பாடப்படும் இசையியக்கம் வாய்ந்த பாடலைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. தேவபாணி எனும் பெயர் மரபிலேயே தேவாரம் எனும் பெயர் தோன்றியதாகக் கொள்வோரும் உளர்.

இவற்றினூடாக முதல் ஏழு திருமுறைகளுமே தேவாரம் என அழைக்கப்படும் சிறப்புடையனவாகின்றன.

## தேவாரமும் பண்மரபும்

தேவாரங்கள் இசைக்கப்படும் சிறப்புடையன. பாடல்களாயமைந்த இப்பாசுரங்கள் இராகத்தோடு பாடப்பெற்றமையால் இறையென்று பெயர்பெற்றன. பாக்களோடு இணைந்து உரைக்கப்பட்ட இசையினை நெஞ்சு, மிடற்று, நா, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை எனும் எட்டு இடங்களில் எடுத்தல், படுத்தல், நளிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என எண்வகைத்தொழில்களால் சீர்பெறப்பண்ணிப் பாடப்பெறுவது பண் எனப்படும்.

பண்கள் நூற்றி மூன்றாகும். இவற்றுள் மூவர் தேவாரங்களுள் இடம்பெறுவன இருபத்து மூன்றேயாகும்.

## வடமொழியும் சைவசமயமரபும்

சைவசமய மரபிற்கு வேதங்களும் சிவாகமங்களும் மூலஊற்றுக்கள். வடமொழி என்பது வட இந்தியாவில் சிறப்புப் பெற்ற வைதிகமொழியாகும்.

இம்மொழி பானியால் செம்மைப்படுத்தப்பட்ட சம்ஸ்கிருதமொழியையும் உள்ளடக்கியது. வைதிகமொழியென்பது இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களையும், இவ்வேதங்களின் பகுதிகளாகிய சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் என்பவற்றையும் சுட்டுவதாகவும், வேதாங்கங்களான சிக்ஷை, வியாகரணம், ஜோதிஷம், சந்தஸ், நிருக்தம், கல்பம் என்பனவற்றையுள்ளடக்கியதாகக் காணப் படுகின்றது. இதிஹாசங்களாகிய மஹாபாரதம், இராமாயணம் என்பனவும், பதினெண் மஹாபுராணங்கள், உபபுராணங்கள் என்பனவும், மூலசிவாக மங்கள், உபாகமங்கள் பத்ததி நூல்கள், சைவசித்தாந்த தத்துவ நூல்கள் மற்றும் இலக்கிய வளத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நூல்கள் பலவற்றை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. இம்மரபுகள் வடமொழியோடிணைந்த சைவசமய மரபும் மூலங்களுமாகும்.

## தேவாரமுதலிகளும் காலப்பின்னணியும்

தமிழகத்தில் பாண்டியரும் பல்லவரும் ஆட்சி செய்த காலப்பகுதியான கி. பி. 6–9 வரையான காலப்பகுதியில் தேவாரமுதலிகளான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் வாழ்ந்தனர். இவர்களுள் திருஞானசம்பந்தர் கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திருநாவுக்கரசர் கி.பி. 6ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 7ம் நூற்றாண்டின் பெரும்பகுதி வரை வாழ்ந்தவர். சுந்தரர் கி.பி.8ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இவ்விறையனுபூதிமான்கள் தோன்றிய காலத்து சமயம், சமூகம், அரசியல் பின்னணி, மொழி ஆகியவைபற்றிய பார்வை அவசியமான தாகும். அரசியல் நிலையில் தொண்டை நாட்டில் சிம்மவிஷ்ணு (கி.பி.575-600) பல்லவராட்சி நிலவச் செய்தான். இவ்வாட்சி கி.பி.710 வரை உச்சநிலையடைந்து நலிவடையத்தொடங்கியது. அதேபோல் கி.பி.575ல் தொடங்கிய பாண்டியராட்சி கி.பி.640 – 862 வரை உச்சநிலையடைந்து பின் நலிவடையத்தொடங்கியது. இதே காலகட்டத்தில் வடஇந்தியாவில் குப்தப்பேரரசின் ஆட்சி நிலவிவந்த காலமே அரசியல் பின்னணியாகியது.

சமூகத்தில் சமண, பௌத்த, சிந்தனைகள், ஜைன சிந்தனைகள் மேலோங்கி இருந்தன. இந்நிலைகளிலிருந்து சைவசமயத்தைப் பாதுகாக்க முயன்ற மறுமலர்ச்சியே இத்தேவாரமுதலிகளது தோற்றமாகும்.

இக்காலகட்டத்தில் சிறப்பாக பல்லவமன்னர்கள் வடமொழி வல்லுனராக விளங்கினர். வைதிக வேள்விகளையும் ஆதரித்தனர். இவர்கள் வட மொழியை மட்டுமே கடினத்தானம் கொண்டு வளர்த்தனர் எனலாம். இந்நிலைகளுடான காலப்பின்னணியும், பின்புலமும் அடித்தளமுமே சைவநாயன்மார்களைத் தோற்றுவித்தது.

## தேவாரமுதலிகளும் தேவாரப்பதிகங்களும்

தேவாரமுதலிகளுள் திருஞானசம்பந்தரது 1ம், 2ம், 3ம் திருமுறை களையும், திருநாவுக்கரசர் 4ம், 5ம், 6ம் திருமுறைகளையும் சுந்தரர் 7ம் திருமுறையையும் அருளியுள்ளார். இவர்களின் முதலாம் திருமுறை 136 பதிகங்களையும் 1469 பாடல்களையும், 2ம் திருமுறை 122 பதிகங்களையும், 1331 பாடல்களையும், மூன்றாம் திருமுறை 127 பதிகங்களையும், 1369 பாடல்களையும், 4ம் திருமுறை 113 பதிகங்களையும், 1070 பாடல்களையும், 5ம் திருமுறை 100 பதிகங்களையும், 1015 பாடல்களையும், 6ம் திருமுறை 99 பதிகங்களையும் 981 பாடல்களையும், 7ம் திருமுறை 100 பதிகங்களையும், 1026 பாடல்களையும் உள்ளடக்கியுள்ளன.

## திருஞானசம்பந்தர் தேவாரம்

முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகள் திருஞானசம்பந்தரால் அருளிச்செய்யப்பட்டவை. இவர் சமண சமயத்தை வென்று சைவத்தை நிலைநாட்டியவர். இவர் பல்வேறு அற்புதங்களைச் செய்தருளியுள்ளார். இவர் இறைவனை சற்புத்திரமார்க்கமாக வழிபட்டு கிரியைமரபில் சாமீப முக்தியைப் பெற்றவராவர். இவரது பதிகங்களில் இயற்கை வனப்பு, தலங்களின் பெருமை, புராணச் சிறப்பு, இராவணன் மகிமை, சிவசின்ன மகிமை என்பனவற்றைக் கூறுவன மரபு.

திருக்கடைக்காப்பு எனச் சிறப்புப்பெறும் திருஞானசம்பந்தரின் தேவாரங் களூடாக சிவானுபவமும், சிவயோக அனுபவமும் ஒருங்கே சித்திக்கப் பெறுகின்றன.

## திருநாவுக்கரசர் தேவாரம்

நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் திருநாவுக்கரசரால் அருளிச்செய்யப்பட்டவை. சமண சமயத்தில் தருமசேனராக விளங்கிய இவர் சிவத் திருவருளால் சைவசமயத்தை நிலைநாட்டியவர். இவர் சரியை மார்க்கத்தில் இறைவரை தாசமார்க்கமாக வழிபட்டவர். சாலோக முத்திபெற்றவர். இவரது பதிகங்களில் வடமொழிச் சொற்பயன்பாடும், செய்திகள் பலவும் விரவிக்காணப்படுகின்றது. சிறப்பாக சிவப்பரம் பொருளின் திருப்பெரும் கருணையும், சிறப்பாக சிவபஞ்சாட்சர மந்திர மேன்மையும் தனிச் சிறப்புப் பெறுகின்றன.

தாண்டகவேந்தன் எனச் சிறப்புப் பெறும் இவரது தேவாரப் பாடல்களூ டாக பக்தியின் மாண்பும், சிவானுபவமும், சிவப்பரம்பொருளின் அனுக் கிரகத்திறனும், திருவடிவப் பொலிவும் தனித்துவம் பெறுகின்றன.

## சுந்தரர் தேவாரம்

ஏழாம் திருமுறை சுந்தரமூர்த்தி நாயனாரால் அருளிச்செய்யப்பட்டது. இவர் சிவனது திருவடியை சிந்திக்கும் சிவனடியார்களது மேன்மையூடாக சிவனின் பேரன்பின் மாண்பினை போற்றியவர். திருத்தொண்டர் தொகையினை வெளிப்படுத்தியவர். கன்மவினையின் பயனை உலகறியச் செய்தவர். பல்வேறு அற்புதங்களால் இறைவன் பெருமையை உணர்ந்தவர். யோகநெறியின் பால் சகமார்க்கமரபில் சாரூபமுக்தியை அடைந்தவர். இவரது பாடல்களே திருத்தொண்டர் புராண நூலுக்கு முதனூலாகவும் விளங்கியது.

திருக்கைலாசத்தில் வாழ்ந்த இவர் சேரமான் பெருமான் நாயனாருடன் உறவுபூண்டு திருக்கைலாசம் சென்றவர் என்ற பெருமைக்குரியவராகிறார்.

## தேவாரப் பாடல்களும் வடமொழிச் சிந்தனை மூலங்களும்

தென்னிந்தியாவில் பாண்டிய பல்லவராட்சிக் காலத்தில் சிறப்பாக பல்லவ மன்னர்களது செல்வாக்குமிக்க சமூகச் சூழலில் பிறசமயமாகிய சமணம், பௌத்தம், ஜைனம் சமயங்களை வென்று மன்னரையும், மக்களையும் சைவத்தின் பால் திசைதிருப்பிய சிறப்பினை தேவாரப்பாசுரங்களூடாக அறிகின்றோம்.

பல்லவர்கால மன்னர்கள் வடமொழிக்கல்வியையும் வடமொழியில் வைதிகம்சார் கிரியை மரபுகளையும், சிறப்புக்களையும் பின்பற்றியதோடு சம்ஸ்கிருத மொழி மூலமான கல்விச் சிந்தனைகளை வளம்படுத்தினர். அத்தகைய சூழலில் வேதங்கள் போற்றும் இறைவடிவங்களும், உபநிடதச் சிந்தனைகளும், சிவாகமங்கள், சிற்பசாஸ்திரங்கள் போற்றும் மரபுகளும், சைவ தத்துவ மரபுகளும் தனித்துவம் பெற்று விளங்கின. இத்தகைய மரபுகள் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளிலும் தெய்வீகவியல் வரலாற்று மரபுகளிலும் நன்கு பரவின.

சைவசமயம் சார்ந்த பண்பாட்டு மூலங்களாக வேதங்களும், சிவாகமங்களும் அவற்றின் தெய்வீகவியல் வரலாறு பேசும் இதிகாச புராணங்களும் விளங்கின. இவையனைத்தும் சைவம் சார்ந்த சமயமரபில் பரந்த சிந்தனைகளை முன்வைத்தன. அத்தகைய வடமொழி மூல நூல்களூடான சிந்தனைகள் தெய்வத் திருவுருவங்களிலும், திருக் கோயில்களிலும், சைவ சமுதாய பழக்கவழக்கங்களிலும், பண்பாட்டிலும், வாழ்வியலிலும் பல்வேறு தாக்கத்தையும் செல்வாக்கினையும் செலுத்தி யுள்ளன. இத்தகைய செல்வாக்குகள் தமிழ்மொழியில் எழுந்த தேவாரப் பாசுரங்கள் மீது கருத்துநிலை வடிவமானதும், பொருள் நிலைவடிவமானதும், தத்துவநிலை சார்ந்ததுமான செல்வாக்கினையும் தாக்கத்தினையும் ஏற்படுத்தின. அத்தகைய சிந்தனைகளின் வெளிப்பாடாக தேவாரப்பாடல்களில் வடமொழிச் சிந்தனைகளின் மூலத்தன்மையைக் காணமுடிகின்றது.

வடமொழிச் சிந்தனை மூலங்களாக வேதங்கள், சிவாகமங்கள், பஞ்சாட்சர மந்திர மகிமை, உபநிடதச் சிந்தனை, சிவசின்னங்கள்,

சைவ நாற்பாதங்கள் பற்றிய சிந்தனைகள் மட்டுமே எடுத்துக்காட்டாக சுட்டப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

'தேவாரம் வேதசாரம்' என தெளிவுபடக் கூறிய காசிவாசி செந்தி நாதையரது சிந்தனைகள் இதற்கு அடித்தளமாக அமைகின்றன.

சைவம் பற்றிய சிந்தனை மரபுகளின் மூலத்தன்மைகள் வடமொழி மூலங்களூடாகவே வெளிக்கொணரப்பட்டு பண்பாடு, மொழி, கலை, கலாசாரம், வாழ்வியல், சமயம், தத்துவம் எனும் பல்வேறு மரபுகளுக்கும் வேதங்களும், சிவாகமங்களும் மூலநூல்களாக விளங்க துணை மூலங்களாக இதிகாசங்களும் புராணங்களும் விளங்குகின்றமை இங்கு மனம்கொள்ளத்தக்கது.

## தேவாரங்களில் வடமொழி மூலப்பரப்பு

தேவாரங்கள் திருநெறிய தமிழ்ப் பாசுரங்களாகும். இத்திருமுறைப் பாசுரங்கள் சிவானுபூதி மிக்கன. இப்பாடல்கள் தமிழ்வேதம் எனவும் போற்றத்தக்க சிறப்புடையன. திருமுறைகளில் தமிழ் வடமொழி எனும் பேதம் கிடையாது. வேதப்பொருளையே இறைவனாக வணங்கும் சிறப்பும், அதிலும் சிவனை வேதப் பொருளாகவே வணங்கும் மரபு தனித்துவமானது.

வேதங்களில் போற்றப்படும் சிவன், ருத்ரன் என்றும் அவரே சிவனாகவும், சைவசித்தாந்த பரமாக பசுபதியாகவும் விளங்கக் காண்கின்றோம். சிவாகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் சிவனின் மூர்த்திபேதங்களையும் அவற்றின் பெருமைகளையும் கூறி நிறகின்றன. அத்துடன் அத்திருவுரு உணர்த்தும் தத்துவார்த்தப் பொருளையும் எடுத்தியம்புகின்றன.

உதாரணமாக முப்புரம் எரித்தது, நஞ்சுண்டது, காலனை உதைத்தது, காமனை எரித்தது என்பவைகளை

ஒட்டாத வானவுணர் புரமூன்றம் ஓரம்பின் வாயின் வீழக்
கட்டானை காமனையும் காலனையும் கண்ணினொடு காலின்வீழ

அட்டானை ஆரூரில் அம்மானை ஆர்வச்செற் றக்கு ரோதம்
தட்டானைச் சாராதே தவமிருக்க அவஞ்செய்து தருகினேனே

(அ.தே.4 திருவாரூர்பதிகம் 5)

ஒன்றுபடக் கூறுகின்றார்.

முதலாக பல விபரங்களை சிவாகமங்களும் சிற்பசாஸ்திரங்களும் திருவுருவ அமைதியாகக் கூறி நிற்க தெய்வீகவியல் வரலாற்றை சிறப்பாக புராணங்கள் கூறிநிற்கின்றன. இவை மிகவிரிந்த தன்மையன.

சிவனின் திருவருட்கோலம், அணிகலன்கள், ஆயுதங்கள் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் வரலாறுடன் தன்மையில் புராணங்களே விளக்கி நிற்கின்றன. இத்தகைய மரபுகள் தேவாரங்களூடாக பிரதிபலிப் பனவாகும்.

இவ்வாறான அடித்தளங்களுக்கு ஏற்ப தேவாரங்களை வளம்படுத்து வனவாக வடமொழி மூலங்கள் விளங்குகின்றன.

**வேதம்**

சிவன் எனும் தேவாரம் சுட்டும் பரம்பொருளானவர் வேதங்களில் ருத்ரனாகவும், புராணங்களிலும் சிவாகமங்களிலும் சிவனாகவும் விளங்கும் இயல்பு தனித்துவம் மிக்கது.

வேதம் என்பது பற்றி பல்வேறு குறிப்புகள் திருவுருங்களில் காணப்படுகின்றன.

உதாரணமாக
கூறினர் கூறினர் வேதம் அங்கமும்
ஆறினர் ஆறிடு சடையர் பக்கமும் (தி.தே.4.10.2.)
வேதங்களோடு ஓர் வீணை யேந்தி
விடையொன்று தாமேறி வேத கீதர் (தி.தே.6.2.10)
வேதங்கள் நான்கும்கொண்டு விண்ணவர் பரவி யேத்த (தி.தே.4.35.5)
வேதமாய விண்ணோர் தலைவனை (தீ.தே.5.57.7)

நான்மறையோ டாறங்கம் நவின்ற நாவார் (தி.தே.6.10.6)

என்று தெளிவுபடுத்துகின்றார்.

## சிவாகமச் சிந்தனை

கிரியை மரபில் தமது திருமுறைப் பாடல்களை நிலைநிறுத்தியவர் திருஞானசம்பந்தர். இவர் தமது பாடல்களில் அர்ச்சனை, வழிபாடு பற்றி கூறிநிற்கின்றார்.

உதாரணமாக:-

'சந்தி பல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அடிகல்' (ச.தே.3.75.1)

'அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்'

(ச.தே.3.80.4)

'தேன் நெய் பால் தயிர் தெங்கிளநீர் கரும்பின் தெளி
ஆன் அஞ்சாரும் முடியான்' (ச.தே.2.6.5)

என்பன குறிப்பிடத்தக்கன.

## பஞ்சாக்ஷர மந்திரம்

சிவனது மூலமந்திரம் பஞ்சாக்ஷரம் ஆகும். இதனை திருவைந்தெழுத்து எனக் கூறுவர். இம் மந்திரம் யசுர்வேதத்து ஐம்பத்தோராவது சாகையில் ஏழாவது காண்டத்தில் நான்காவது காண்டமாக அமையும் சதருத்தீயத்தில் ஐந்தாவது பிரஸ்னம் மத்தியில் விளங்குகிறது. இதில் இருதயமாக 'நமசிவாய' எனும் மந்திரம் விளங்குகிறது.

இம்மந்திரத்தின் மகிமையை சம்பந்தரும், திருநாவுக்கரசரும் சிறப்பான முறையில் பஞ்சாக்ஷரத்தினை விளக்கியுள்ளனர். இதனை சம்பந்தர்

'சொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவராயிடின்
எல்லாத் தீங்கையும் நீக்குவார் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே' (3.49.65)

நாவுக்கரசர்

'நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே' (4.12.2)

'நற்றுணையாவது நமச்சிவாயவே' (4.12.1)

'நன்னெறியாவது நமச்சிவாயவே' (4.12.9)

சுந்தரர்

'நற்றவா' உனை நான்மறக்கினும் சொல்லு

நா நமச்சிவாயவே' (7.48.1-10)

என்பன குறிப்பிடத்தக்கன.

## உபநிடதச் சிந்தனை

உபநிடதங்கள் நூற்றெட்டில் சைவத்தின் மேன்மையினை சுவேதாஸ்வதர உபநிடதம் சிறப்பாகக் கூறி நிற்கின்றது. இவ்வுபநிடதக்கருத்துக்களும் மற்றும் கட, கேன, பிம்மஜாபால, பாசுபத முதலான உபநிடதங்களும் அவ்வாறே திருமுறைகளில் ஆங்காங்கு பயன்படுத்தப்படுகின்றன.

## சிவசின்னங்கள்

சிவசின்னங்களான விபூதி, ருத்ராக்கம் முதலான பொருட்களும் எதையும் சிவனாகவே சிந்திக்கும் மேன்மையும், சிவோகம் பாவனையும், சிறப்பாக சிவனை அன்பின் வடிவமாக நோக்கும் மேன்மையும் குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக,

'அகனமர்ந்த அன்பினராய்....' (ச.தே.1.13.2.6)

'அன்பெனும் பாசம்வைத்தார்' (அ.தே.4.30.3)

என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

மூவர் தமிழ்த் தேவாரப்பாசுரங்கள் நற்றமிழில் விளங்கும் மந்திரங்களாக விளங்குகின்றன. இவை சைவசமயத்தின் சாஸ்திர

நூல்களானவையும் வடமொழியில் அமைந்த வேதங்கள், வேதாகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், சிவாகமங்கள், சிற்ப சாஸ்திரங்கள், சித்தாந்த சாஸ்திரங்கள் சார்ந்த மூலநூல்களில் கூறப்படும் அம்சங்களை எடுத்துரைப்பனவாக உள்ளன.

தேவாரத் தமிழ்ப் பாசுரங்களில் வடமொழிச் சிந்தனைகள் காணப்படுகின்றது போன்று ஆதிசங்கரரின் சௌந்தர்யலஹரியில் 'த்ரவிட சிசு' என்று திருஞானசம்பந்தரும் சிவானந்தலஹரியில் கண்ணப்பநாயனார் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன. அதேவேளை 'உபமன்யு பக்தவிலாசம்' எனும் சிவபக்தவிலாசம் சிவனடியார் வரலாற்றை வடமொழியில் கூறுவதாகவும், திருவிளையாடற்புராணம் ஹாலாஸ்யமாஹாத்ம்யம் எனக் கூறப்படும் சிறப்பும் தமிழிற்கு பெருமை சேர்ப்பதாக அமைகின்றன.

இவ்வாறாக மூவர் தமிழ்த் தேவாரப் பாசுரங்களின் செழுமைக்கு வடமொழிச் சிந்தனைகள் அடியூற்றாய் அமைந்தமை தெளிவாய் உணரப் பாலதாக உள்ளது.

## உசாத்துணை நூல்கள்


**மூலநூல்கள்**

**தமிழ்:**

1. பன்னிருதிருமுறைகள் (2013), முனைவர் ச.வே.சுப்பிரமணியம் (பதி.) மணிவாசகர் பதிப்பகம், சென்னை (4ம் பதிப்பு).

**சம்ஸ்கிருதம்**

1. ஸ்ரீருத்ரம் (1989), 'அண்ணா' (பதி.) ஸ்ரீராமகிருஷ்ணமிஷன், சென்னை.
2. காமிகாகமம் (பூர்வபாகம்) (1978), ஸ்ரீசுவாமிநாதசிவாசாரியார் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

3. காமிகாகமம் (உத்தரபாகம்) (1988), ஸ்ரீசுவாமிநாதசிவாசாரியார் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.
4. சகலாகமசாரசங்கிரகம் (1974), ஸ்ரீசுவாமிநாதசிவாசாரியார் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.
5. காரணாகமம் (பூர்வபாகம்) (1921) மயிலை அழகப்பமுதலியார் (பதி.) சிவஞானபோத யந்திரசாலை, சித்தாரிப்பேட்டை, சென்னை.
6. காரணாகமம் (உத்தரபாகம்) (1927) மயிலை அழகப்பமுதலியார் (பதி.) சிவஞானபோத யந்திரசாலை, சித்தாரிப்பேட்டை, சென்னை.

### ஏனைய நூல்கள்

1. கைலாசநாதக் குருக்கள்,கா., (1961), சைவத்திருக்கோயிற் கிரியைநெறி, இந்து கலாபிவிருத்திச் சங்கம், கொழும்பு.
2. ................ (2002) இந்துப்பண்பாடு – சில சிந்தனைகள், நல்லூர்.
3. ................ (1960) வடமொழி இலக்கிய வரலாறு (வைதிக இலக்கியம்) கொழும்பு.
4. சுப்பிரமணியன், கலாநிதி நா., (2002) நால்வர் வாழ்வும் - வாக்கும், கலைஞன் பதிப்பகம், சென்னை (1ம் பதிப்பு).
5. ஞானசம்பந்தன் பேராசிரியர் அ.ச., (1999), பெரியபுராணம் - ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை.
6. செந்திநாதையர் காசிவாசி (1917), தேவாரம் வேதசாரம், சென்னை.
7. பன்னிரு திருமுறைகள் (2009), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
8. செங்கல்வராயபிள்ளை, வ.சு., (1960), தேவார ஒளிநெறி (2.அப்பர்) தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.
9. லட்சுமி நாராயணன், கே.சி., (பதி.) (2008) அப்பர் தேவாரத்தில் வேதங்கள், சென்னை, 1ம் பதிப்பு.
10. சோமசுந்தரம் டாக்டர், P.S., (2006), சம்பந்தர் காட்டும் திருத்தலக் காட்சி, சென்னை (1ம் பதிப்பு).